# உதயம்

கவிதைகள்



திருலோகசீதாராம்

புதுப்புனல் பதிப்பகம்.
திருச்சி - 2.

# உதயம்

கவிதைகள்.

திருலோக சீதாராம்.

புதுப்புனல் பதிப்பகம்
திருச்சி-2.



# திருலோக சீதாராம்

"மந்தஹாஸன்"

கவிஞர் திரு. லோக. சீதாராம் திருச்சி மாவட்டத்துத் தொண்டமாந்துறையில் 1917-ல் பிறந்தார். பூர்வீகம், திருவையாறு. அந்தக் காலத்தில் பெரும் புலவராக விளங்கிய அந்தகக் கவிஞர் இராமசுவாமி படையாட்சியாரிடம் தமிழை முறையாகப் பயின்றவர். பத்திரிகைத் துறையில் முதல் முதலில் ஈடுபட்ட பொழுது இவருக்கு வயது பதினெட்டு. இந்திய வாலிபன், பாலபாரதம் ஆர்க்காடு தூதன், கிராம ஊழியன் ஆகிய ஏடுகளின் ஆசிரியராக இருந்து, பின்னர் "சிவாஜி" ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவரது சொற்பொழிவுகளும் கவிப்பொழிவுகளும் தமிழகத்தில் பிரசித்தம். பன் மொழிக் கவியரங்குகள் பலவற்றில் தமிழ்க் கவிஞராகக் கலந்துகொண்டவர். இவரது தமிழ், சிந்தனைச் சிறப்பிலும் கற்பனை வளத்திலும் செறிந்து கிளர்ச்சியூட்டும் திறன் படைத்தது. மகாகவி பாரதி இவரது ஞானாசிரியர். தென்மொழிகள் புத்தக டிரஸ்டு ஆதரவில் வெளியான கவிதைக் கோவையின் தொகுப்பாசிரியர். இவரது "கந்தர்வகானம்" என்ற சிறு காவியம் வானொலியில் ஒலி பரப்பாயிற்று. பிரபல ஜெர்மன் நாவலாசிரியர் ஹெர்மன் ஹெஸ்ஸேயின் "சித்தார்த்தன்" என்னும் அரிய நூலைத் தமிழாக்கியுள்ளார். தமது சொற்பொழிவுகளுக்குப் பொற்காசு பெறும் பொற்காசுப் புலவர் இவர். அவ்வப்போது பத்திரிகைகளுக்கு எழுதிய கவிதைகளின் தொகுப்பு இந்த நூல். இவரது ஏனைய நூல்களும் புதுப் புனல் வெளியீடுகளாக வெளிவரும்.